# திருவேற்காடு நகராட்சி

## 05.10.2020 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட நகர்மன்ற தீர்மான எண் 1250

## 05.10.2020 முதல் நகரமைப்பு கட்டணங்களை சீரமைத்தல் குறித்த அறிவிக்கை

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 தமிழ்நாடு அரசு அரசிதழ் அறிவிக்கையில் வெளியிடப்பட்டுள்ளதன் தொடர்ச்சியாக மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக சுற்றறிக்கை ந.க.எண். 31159/2018/டிபி3, நாள் 05.03.2019–ல் வெளியிடப்பட்ட அறிவுரைக்கிணங்க திருவேற்காடு நகராட்சியில் கட்டிட உரிமம் வழங்குதல் தொடர்பான நகரமைப்பு கட்டணங்கள் நகர்மன்ற தீர்மானங்கள் எண் 745 நாள் 07.03.2019 மற்றும் எண் 1188 நாள் 30.06.2020ல் முறையே 01.04.2019 மற்றும் 01.07.2020 முதல் நடைமுறைப்படுத்திட திருத்தியமைக்கப்பட்டது.

இந்நகர்மன்ற தீர்மான எண்.745 நாள் 07.03.2019ல் கட்டிட உரிம கட்டண விகிதங்கள் குறிப்பிடப்படும் போது கட்டண விகிதங்கள் ஐந்து ஆண்டு உரிம காலத்திற்கு பதிலாக ஒரு ஆண்டுக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் மேற்படி நகர்மன்ற தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட கட்டிட உரிம கட்டணத்தினை ஐந்தால் பெருக்கி விண்ணப்பதாரர்களிடம் வசூல் செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கை எண் 31815/2019/டிபி3 நாள் 01.10.2020ல் கட்டிட உரிம கட்டண விகிதங்களை ஓராண்டிற்கு நிர்ணயம் செய்து அதன்மடங்குகளில் ஐந்து ஆண்டுகளுக்கு கணக்கீடு செய்வதை தவிர்த்து மாமன்றத்தால் கட்டிட அனுமதிக்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை ஒருமுறை செலுத்தினால் ஐந்து ஆண்டுகளுக்கும் செல்லத்தக்க வகையில் உரிமம் வழங்கும் முறையை நடைமுறைப்படுத்திட அனைத்து நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே நகராட்சி நிர்வாக ஆணையரக சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க இந்நகராட்சியில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை ஐந்தாண்டு கால அளவிற்கு செல்லத்தக்க அளவிற்கு திருத்தியமைத்து நடைமுறைப்படுத்திட வேண்டியஅவசியம் எழுந்துள்ளது. மேலும் அருகிலுள்ள பூந்தமல்லி முதல் நிலை நகராட்சி, ஆவடி மாநகராட்சி, சென்னை மாநகராட்சி, தாம்பரம் சிறப்புநிலை நகராட்சி, பம்மல் தேர்வுநிலை நகராட்சி ஆகியவற்றில் நிர்ணயிக்கப்பட்ட கட்டிட உரிம கட்டணங்களை ஒப்புநோக்கிடும் போது இந்நகராட்சியில் மேற்படி கட்டணங்களை ஐந்தாண்டுகளுக்கு பெருக்கி கணக்கிட்டால் கட்டிட உரிம கட்டணம் ஏற்கனவே அபரிமிதமாக உயர்த்தப்பட்டுள்ளது தெளிவாகிறது. விண்ணப்பதாரர்கள் கட்டிட அனுமதி குறித்து விண்ணப்பிக்கும் போது இந்த அதிகப்படியான கட்டணங்கள் குறித்து அவ்வப்போது நேரில் தங்களது அதிருப்தியினை தெரிவித்து வந்துள்ளனர். மேலும் ஏற்கனவே அனைத்து நகராட்சிகளில் வசூல் செய்து வரும் சொத்துவரியில் ஏற்படுத்தப்பட்ட உயர்வினை தமிழக அரசு சீராய்வு செய்திட ஏதுவாக தற்போது நிறுத்தி வைத்துள்ளது. தற்போது கொரோனா ஊரடங்கினால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல்களை கருத்திற் கொண்டு கட்டிட உரிம கட்டணங்களை மறுசீரமைப்பு செய்திட அவசியம் எழுந்துள்ளது. மேலும் நகரமைப்பு தொடர்பான இதர கட்டணங்களை இரண்டு நகர்மன்ற தீர்மானங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதை ஒருங்கிணைத்து ஒரே அறிவிக்கையாக வெளியிட வேண்டியுள்ளது.

எனவே மேற்கண்ட சூழ்நிலையில் அனைத்து கட்டணங்களையும் கீழ்க்கண்டவாறு 05.10.2020 முதல் சீரமைத்து நகராட்சி நிர்வாக ஆணையரக சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவுரைகளை நடைமுறைப்படுத்திடவும் அரசிதழில் வெளியிடவும் நகர்மன்ற தீர்மானம் எண் 1250 நாள் 05.10.2020இல் அனுமதித்து ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | கட்டிடத்தின் விவரம் | குடியிருப்பு கட்டிடம் | | வணிகம் / தொழிற்சாலை கட்டிடம் | |
|---|---|---|---|---|---|
| | | ஏற்கனவே உள்ளது (ஓராண்டிற்கு) ரூ. | தற்போதைய கட்டணம் (ஐந்தாண்டு காலத்திற்கு) ரூ. | ஏற்கனவே உள்ளது (ஓராண்டிற்கு) ரூ. | தற்போதைய கட்டணம் (ஐந்தாண்டு காலத்திற்கு) ரூ. |
| 1 | **கட்டிட உரிம கட்டணம்** **(ஐந்து ஆண்டு காலத்திற்கு)** | | | | |
| அ | தளம் போட்ட (RCC) கட்டிடம் 100 சதுரடிக்கு | 500/– | 1400/– | 1000/– | 3000/– |
| ஆ | ஓடு அல்லது ஆஸ்பெஸ்டாஸ் 100 சதுரடிக்கு | 120/– | 500/– | 600/– | 2000/– |
| **II** | **இதர கட்டணங்கள்** | | | | |
| வ எண் | கட்டண விவரம் | குடியிருப்பு கட்டிடம் | | வணிகம் / தொழிற்சாலை கட்டிடம் | |
| | | ஏற்கனவே உள்ளது ரூ. | தற்போதைய கட்டணம் (ஐந்தாண்டு காலத்திற்கு) ரூ. | ஏற்கனவே உள்ளது ரூ. | தற்போதைய கட்டணம் (ஐந்தாண்டு காலத்திற்கு) ரூ. |
| 1 | மதில் சுவர் 100 அடி நீளத்திற்கு | 120/– | 120/– | 600/– | 600/– |
| 2 | கிணறு / ஆழ்துளைக்கிணறு ஒன்றிற்கு | 400/– | 400/– | 500/– | 500/– |
| 3 | கூடுதல் வரைபடம் ஒவ்வொன்றுக்கும் | 100/– | 100/– | 200/– | 200/– |
| 4 | ஆய்வுக்கட்டணம் | 2000/– | 2000/– | 5000/– | 5000/– |
| 5 | குளியல் அறை மற்றும் கழிவறை ஒன்றிற்கு | 400/– | 400/– | 800/– | 800/– |
| 6அ | சாலை வளர்ச்சிக் கட்டணம் மனைக்கு முன்புறம் சாலையின் அகலம் 40 அடி வரைக்கும் உள்ளதற்கு | 300/– | 300/– | 500/– | 500/– |
| 6ஆ | சாலை வளர்ச்சிக் கட்டணம் மனைக்கு முன்புறம் சாலையின் அகலம் 40 அடி அதற்கு மேல் பின் ஒவ்வொரு அடிக்கும் | 500/– | 500/– | 700/– | 700/– |
| 7 | கட்டிட இடிமான கட்டணம் 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 50/– | 50/– | 100/– | 100/– |
| 8 | மழைநீர் சேகரிப்பு கட்டணம் (ஒரு குடியிருப்புக்கு) | 750/– | 750/– | 10000/– | 10000/– |
| 9 | கட்டிட உரிமம் புதுப்பித்தல் கட்டணம் | அனுமதி காலம் முடியும் முன்பாக மூன்று ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு கோரும் மனுவிற்கு நடப்பில் செலுத்தப்பட்ட கட்டணங்கள் முழுவதும் செலுத்திய பின்னர் ஒருமுறை மட்டுமே கால நீட்டிப்பு அனுமதி வழங்கப்படும் | | | |
| 10அ | மனை உட்பிரிவு அனுமதி கட்டணம் A) இரண்டு மனைகள் வரை | 4000/– | 4000/– | – | – |
| 10ஆ | B) 8 மனைகள் வரை | 5000/– | 5000/– | – | – |
| 11 | மனைப்பிரிவு ஒப்புதலுக்கு ஒரு ஏக்கருக்கும் அதற்கு குறைவாகவும் (ஏக்கர் ஒன்றிற்கு) | 20000/– | 20000/– | 40000/– | 40000/– |

| III அனைத்து கட்டிடங்களுக்கும் பொதுவான கட்டணங்கள் | | | |
|---|---|---|---|
| வ எண் | | ஏற்கனவே உள்ளது (ஐந்தாண்டு காலத்திற்கு) ரூ. | தற்போதைய கட்டணம் (ஐந்தாண்டு காலத்திற்கு) ரூ. |
| 1 | மாடிப்படி ஒன்றிற்கு | 500/– | 500/– |
| 2 | மின் தூக்கி (Lift) ஒன்றிற்கு | 1000/– | 1000/– |
| 3 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி (OHT) ஒன்றிற்கு | 500/– | 500/– |
| 4 | நச்சுத் தொட்டி கட்ட (Septic Tank) ஒன்றிற்கு | 1000/– | 1000/– |
| 5 | கட்டுமான பொருட்கள் கட்டிட இடிபாடு பொருட்கள் சேகரிப்பு கட்டணம்<br>கட்டிடத்தின் பரப்பின் சதுர மீட்டர் ஒன்றிற்கு | 50/– | 50/– |
| 6 | நகர் வரைபடம் ஒன்றிற்கு | 1000/– | 1000/– |
| | நகராட்சி எல்லையில் உள்ள பூங்கா, நகராட்சி இடங்கள் மற்றும் நகராட்சி பராமரிப்பில் உள்ள இடங்களில், சினிமா மற்றும் நாடகம் சம்மந்தமான படப்பிடிப்பு நடத்த (காவல் துறை அனுமதி பெற்றபின்)<br>காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை – நாள் ஒன்றுக்கு | 25000/– | 25000/– |
| 7 | இந்நகராட்சி எல்லைக்குள் பொருட்காட்சி அல்லது சர்க்கஸ் நடத்துவதற்கு (சம்மந்தப்பட்ட துறையில் அனுமதி பெற்று, தடையில்லாத சான்று சமர்பிக்க வேண்டும்). ஒரு மாதத்திற்கு | 50000/– | 50000/– |
| 8 | அனுமதி பெறாமல் கட்டிட வேலைகள் ஆரம்பித்த பிறகு அனுமதி கோரும் விண்ணப்பங்களுக்கு (விதிகளின்படி கட்டிடம் கட்டப்பட்டு வரவேண்டும்)<br>ஐந்து ஆண்டு காலம் அனுமதி வழங்க<br>(குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாதது) | கட்டிட அனுமதி கட்டணத்தில் 50% கூடுதலாக வசூல் செய்யப்படும். | கட்டிட அனுமதி கட்டணத்தில் 50% கூடுதலாக வசூல் செய்யப்படும். |
| 9 | குடியிருப்பு அல்லாத கட்டிடம் அனுமதி வழங்குவது ஐந்து ஆண்டு காலம் அனுமதி வழங்க | தொழிற்சாலை கட்டிடம் கட்டுவதற்கு ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட தொகை வசூல் செய்யப்படும். | தொழிற்சாலை கட்டிடம் கட்டுவதற்கு ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட தொகை வசூல் செய்யப்படும். |

**எஸ்.செந்தில் குமரன்,**
**தனிஅலுவலர் (ம) ஆணையர்**
**திருவேற்காடு நகராட்சி**